## September 11, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. அடுத்த ஆண்டு சட்டப் பேரவைத் தேர்தலைச் சந்திக்க உள்ள தமிழகம், அஸ்ஸாம், கேரளம், புதுச்சேரி மற்றும் மேற்கு வங்க மாநிலங்களில் நிகழாண்டு இறுதியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணியைத் தொடங்க தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
    i. தில்லியில் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தலைமையில் நடைபெற்ற அனைத்து மாநில தலைமைத் தேர்தல் அதிகாரிகள் பங்கேற்ற கூட்டத்தில் இது தொடர்பாக ஆலோசிக் கப்பட்டதாகவும், தீவிர திருத்தப் பணியைத் தொடங்கும் தேதி விரைவில் முடிவு செய்யப்படும் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.
    ii. வெளிநாடுகளிலிருந்து சட்டவிரோதமாக புலம்பெயர்ந்தவர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலில் நீக்குவதே இந்தச்சிறப்பு தீவிர திருத்தத்தின் முக்கிய நோக்கம். சிறப்பு தீவிர திருத்தப் பணியில் குறைபாடுகள் இல்லாத வாக்காளர் பட்டியலை உறுதிப்படுத்தும் வகையில் தேர்தல் அதிகாரிகள் வீடு வீடாகச் சென்று ஆய்வை மேற்கொள்வர்.
    iii. வெளி மாநிலங்களிலிருந்து புலம்பெயர்ந்த வாக்காளர்கள், கூடுதல் உறுதிமொழிப் படிவத்தை அதிகாரிகளிடம் சமர்ப்பிக்க வேண்டும். மேலும், 1987-ஆம் ஆண்டு ஜூலை 1-ஆம் தேதிக்கு முன்பாக இந்தியாவில் பிறந்ததை உறுதி செய்யும் வகையில் பிறந்த தேதியை உறுதிப்படுத்தும் ஆவணம் அல்லது பிறந்த இடத்தை உறுதிப்படுத்தும் ஆவண நகலை சமர்ப் பிக்கவேண்டும்' என்றனர்.
2. 11.09.2025 - இன்று மகாகவி பாரதி 104-ஆவது நினைவு தினம்; அமெரிக்காவின் சிகாகோ நகரில் சுவாமி விவேகானந்தர் உரையாற்றிய நாள் (1893);
3. நேபாளத்தில் இடைக்கால அரசு அமைக்க மூவரின் பெயரை போராட்டக் குழுக்கள் பரிசீலித்து வருகின்றன.
    i. இந்நிலையில், அந்நாட்டில் இடைக்கால அரசு அமைய வேண்டு என்று போராட் டத்தை முன்னெடுத்த இளைஞர் குழுக்கள் முடிவு செய்துள்ளன.
    ii. அந்த அரசின் தலைவராகப் பொறுப்பேற்க முன்னாள் உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதி சுசீலா கார்கி, காத்மாண்டு மேயர் பாலேந்திர ஷா, நேபாள மின்சார வாரிய முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி குல்மன் கிசிங் ஆகிய மூவரின் பெயர்களை அந்தக் குழுக்கள் தேர்வு செய்துள்ளன.
    iii. மூவரில் சுசீலா கார்கிதான் நேபாள உச்சநீதி மன்றத்தின் ஒரே பெண் தலைமை நீதிபதியாக இருந்தவர்.
4. தமிழ்நாடு மாவட்ட காவல் சட்டம் நடைமுறைக்கு வந்த செப்டம்பர் 6-ஆம் தேதியன்று காவலர் தினமாக கொண்டாடப்படும்.
5. ஈரான் அணுசக்தி மையங்களைக் கண்காணிக்க அந்த நாடு ஒப்புக்கொண்டுள்ளதாக ஐ.நா. அணுசக்தி கண்காணிப்பு அமைப்பான ஐஏஇஏ தெரிவித்துள்ளது.
    i. இது குறித்து அந்த அமைப்பின் பொது இயக்குநர் ரஃபேல் கிராஸி கூறுகையில், அமெரிக்காவும், இஸ்ரேலும் அண்மையில் தாக்குதல் நடத்திய பகுதிகளில் இருந்த அணுசக்தி பொருள்கள் தற்போது எங்கு வைக்கப்பட்டுள்ளன என்பது குறித்து ஐஏஇ ஏ-விடம் தெரியப்படுத்த ஈரான் ஒப்புக்கொண்டுள்ளதாகக் கூறினார்.
    ii. அவருக்கும் ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சர் அப்பாஸ் அராக்சிக்கும் இடையே எகிப்து வெளியுறவுத் துறை அமைச்சர் பதர் அப்தலாட்டி முன்னிலையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

6. பிரேஸிலில் அண்மையில் நிறைவடைந்த உலக வுஷு சாம்பியன்ஷிப்பில், இந்திய அணியினர் 3 வெள்ளி, 1 வெண்கலம் என 4 பதக்கங்கள் வென்று நாடு திரும்பினர். போட்டியின் வர லாற்றிலேயே முதல்முறையாக 3 இந்திய வீராங்கனைகள் இறு திச்சுற்று வரை வந்தனர்.
7. உலக குத்துச் சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் முதல் பதக்கத்தை உறுதி செய்தார் நுபுர்.
    i. இங்கிலாந்தின் லிவர்பூல் நகரில் உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் மகளிர் 80 பிளஸ் கிலோ காலிறுதியில் இந்தியாவின் நுபுர் 4-1 என்ற புள்ளிக் கணக்கில் உஸ்பெகிஸ்தானின் ஆல்டினாயை வீழ்த்தி அரையிறுதிக்கு தகுதி பெற்றார்.
    ii. ஏற்கெனவே அஸ்டானாவில் நடைபெற்ற உலகக் கோப்பை குத்துச்சண்டை போட்டியில் தங்கம் வென்றிருந்த நுபுர் இப்போட்டியில் இந்தியாவின் முதல் பதக்கத்தை உறுதி செய்தார்.
8. பிரதமர் நரேந்திர மோடி வரும் 13-ஆம் தேதி மணிப்பூருக்கு பயணிப்பார் என எதிர்பார்க்கப்படும் நிலையில், அவரது வருகையை குகி-ஜோ பழங்குடியின அமைப்புகள் வரவேற்றுள்ளன.
    i. வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில் கடந்த 2023-இல் மைதேயி சமூகத்தினர் மற்றும் குகி பழங்குடியினர் இடையே பெரும் கலவரம்ஏற்பட்டு,வன்முறை தொடர்ந்தது.
    ii. மோதல் சம்பவங்களில் இது வரை 250-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். வீடுகளை விட்டு வெளியேறிய ஆயிரக்கணக்கானோர், தொடர்ந்து நிவாரண முகாம்களிலேயே தங்கியுள்ளனர்.
    iii. குகி-ஜோ கவுன்சில் அரசமைப்புச் சட்டத்தின் 239ஏ பிரிவின்கீழ் தனி நிர்வாகம் (பேரவையுடன் கூடிய யூனியன் பிரதேசம்) கோரியுள்ளது.
    iv. மணிப்பூர் முதல்வராக இருந்த பிரேன் சிங் கடந்த பிப்ரவரி மாதம் ராஜிநாமா செய்த நிலையில், சட்டப் பேரவை முடக்கப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சி அமலில் உள்ளது.
9. மறைந்த முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்குக்கு பி.வி.நரசிம்ம ராவ் நினைவு பொருளாதார விருது வழங்கப்பட்டது.
    i. ஹைதராபாதில் உள்ள பி.வி. நரசிம்மராவ் நினைவு அறக்கட்டளை சார்பில் இந்த விருது வழங்கப்பட்டது. திட்டக்குழு முன்னாள் துணைத் தலைவர் மாண்டேக் சிங் அலுவாலியா இந்த விருதை வழங்கினார்.
    ii. நாட்டின் பொருளாதாரத்தில் சிறப்பான பங்களிப்பை வழங்கும் ஆளுமைகளுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.
10. ராமநாதபுரம் மாவட்டத்தில் ஹைட்ரோ கார்பன் இருப்பை ஆய்வு செய்ய வழங்கப்பட்ட அனுமதியை ஏன் ரத்து செய்யக் கூடாது என விளக்கம் அளிக்க ஓஎன்ஜிசி நிறுவனத்துக்கு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.
    i. தமிழ்நாடு அரசு கடந்த 2020-இல், காவிரி டெல்டா பகுதியை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக அறிவித்து சட்டம் இயற்றியது.
    ii. இந்தச் சட்டத்தின் அடிப்படையில், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள், மேலும் புதுக்கோட்டை, கடலூர் மாவட்டங்களில் குறிப்பிட்ட பகுதிகளில் எரிபொருள், இயற்கை வாயு, நிலக்கரி, மீத்தேன் மற்றும் ஷேல் வாயு போன்றவற்றின் இருப்பு குறித்த ஆராய்ச்சி மற்றும் அகழ்வுத் தொழில்கள் மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டது. மேலும், கடந்த 2023-ஆம் ஆண்டு இந்தத் தடை, புதிதாக உருவாக்கப்பட்ட மயிலாடுதுறை மாவட்டத்துக்கும்

விரிவுபடுத்தப்பட்டது.

iii. இதற்கிடையே, எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு கழகத்துக்கு (ஓஎன்ஜிசி) மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம், ராமநாதபுரம் மாவட்டத்தில் ஹைட்ரோ கார்பன் இருப்பு குறித்து ஆய்வு செய்ய சுற்றுச்சூழல் அனுமதி வழங்கியிருந்தது.

iv. இதையடுத்து, நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, ஓஎன்ஜிசி நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட அனுமதியைத் திரும்பப்பெற மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தை வலியுறுத்தியிருந்தார்.

v. இந்த நிலையில், மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் அந்த அனுமதியை ஏன் ரத்து செய்யக் கூடாது என ஓஎன்ஜிசி நிறுவனத் திடம் விளக்கம் கேட்டு அறிவிக்கை வெளியிட்டுள்ளது.